# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 5 ஆம் ஞாயிறு | 9 பிப்ரவரி 2025


**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

சூழலியல் (பணித்துவம்) அன்னை பூமியைக் காப்பாற்றும் துரித தூதுரைப் பணி செய்யும் உரிமையை ஏற்றுக்கொள்ள அழைப்பு

# மக்களோடும் இயற்கையோடும் இணக்கமாக இருத்தல்

இன்றைய நற்செய்தி நிகழ்வு நமக்கு மிகவும் அறிமுகமான ஒன்று. கெனசரேத்து ஏரிக்கரையில் இயேசு நிற்கும்போது, திரளான மக்கள் கூட்டம் அவரைச் சுற்றிக் கூடுகிறது. மக்களால் நெருக்கித் தள்ளப்படுவதைத் தவிர்க்க இயேசு சீமோனுக்குச் சொந்தமான ஒரு படகில் ஏறுகிறார். இயேசு பேசிமுடித்தபின், சீமோனை நோக்கி, மீன்பிடிக்க வலைகளை போடுமாறு கூறுகிறார்.



சீமோன் இயேசுவிடம் தானும் தனது தோழர்களும் இரவுமுழுவதுமாக பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை என்று விளக்குகிறார். ஆனாலும் இயேசு சொல்வதைச் செய்ய அவர் தயாராய் இருக்கிறார். அவர்கள் கடலுக்குச் செல்லும்போது, ஒரு அற்புதம் நடக்கிறது. அவர்கள் பெருந்திரளான மீன்களைப் பிடித்தார்கள். இந்த அனுபவத்தை எதிர்கொண்ட சீமோன் தம்முன் இருப்பவர் சாதாரணமான மனிதர் அல்ல என்பதை உணர்ந்துகொள்கிறார். இயேசுவின் கால்களில் விழுந்து,"ஆண்டவரே" என்று அழைத்து தான் தகுதியற்றவன் என்ற உணர்வை வெளிப்படுத்துகிறார். பின்னர் அவரும் அவருடைய பங்காளிகளும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றினர்.

நற்செய்தியில் காணப்படும் இந்த நிகழ்வு பலருக்கும் ஒரு திரளான மீன்பிடிப்பு. மற்றவர்களுக்கு இது சீமோனின் மனமாற்றம் மற்றும் அவருடைய பங்காளிகள் இயேசுவின் சீடர்களாக மாற இது ஒரு அழைப்பு விடுப்பதைப் பற்றியது. ஒருவேளை, இந்தக் கதைக்கு இன்னொரு கண்ணோட்டமும் இருக்கலாம். “மீனவர்களை எப்போது, எங்கு, மீன்பிடிக்க அழைத்துச் செல்லவேண்டுமென்று இயேசுவுக்கு எப்படித் தெரியும்”? வழக்கமான பதில். “அவர் கடவுளின் மகன் என்பதால் அவருக்குத் தெரியும்” அல்லது உலகம் அவர் மூலமாக படைக்கப்பட்டதால் அவருக்குத் தெரியும் என்ற பதில்களாக இருக்கலாம்.

இன்னும் மனிதராக இருந்த இயேசு, இயற்கைக்கு மிக நெருக்கமாக இருந்திருக்கலாம்? லாவ்டாதோ சி (எண்: 100) என்ற சுற்றறிக்கையில் திருத்தந்தை பிரான்சிஸ், புதிய ஏற்பாடு “உலகிற்குரிய இயேசுவையும், உலகத்துடனான அவரது உறுதியான மற்றும் அன்பான உறவையும் பற்றிப் பேசுகிறது என்று குறிப்பிடுகிறார்.”அவர் இயற்கையுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்ததால், அதற்கு, அன்பும் ஆச்சரியமும் நிறைந்த கவனத்தை அளித்தார்(எண் 97), உலகில் உள்ள அழகைக் கருத்தூன்றி கவனிக்க இயேசு பிறரையும் அழைக்கமுடிகிறது என்று மேலும் திருத்தந்தை கூறுகிறார்.

அனைத்திற்குமேலாக, இயேசு தாமே “படைப்புடன் முழு இணக்கத்துடன் இருந்தார், அதாவது அவர் தன்னை உலகைவிட்டு ஒதுக்கி வைத்துக்கொள்ளவில்லை. ஆனால் படைப்பில், முழுமையாக தம்மை மூழ்கவைத்துக்கொண்டார்.(எண் 98) எனவே, “இயேசு, தம்முடைய சீடர்களாகிய நம்மையும் உலகத்துடன், அதாவது மக்கள் மற்றும் இயற்கையுடனும் ஒரு உறுதியான மற்றும் அன்பான உறவைக் கொண்டிருக்க விரும்புகிறார்:. மக்களுடனும் இயற்கையுடனும் எப்படி நெருக்கமாக இருக்க வேண்டுமென்பதை இயேசுவிடமிருந்துக் கற்றுக்கொள்வோம்.

*சிலர், கடவுளைக் கண்டறிய புத்தகங்களைப் படிக்கிறார்கள். ஆனால் ஒரு சிறந்தபுத்தகம் உள்ளது. படைக்கப்பட்ட பொருட்களின் தோற்றம்... கடவுள்.. அந்தப் புத்தகத்தை ஒருபோதும் மையால் எழுதவில்லை. அதற்குப் பதிலாக, அவர் படைத்தவற்றை உங்கள் கண்களுக்கு முன்னதாக நிறுத்தி வைத்தார்.*

*ஹிப்போவின் புனித அகுஸ்தினார்.*

**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா 6:1-8

திருப்பாடல்: 138: 1-5, 7-8

1 கொரிந்தியர் 15: 1-11 (அ) 15:3-8, 11

லூக்கா 5: 1-11


INTERNAL CIRCULATION ONLY
BUL 06/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org